விலை சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

. வ. ஆ. 2001, சித்திரை 9 உ புதன் (22-4-70) ஸபர் பிறை 15 — புத்தகம் 24 இதழ் 19

## குணரத்தினத்துக்கு ஆதரவு தேடும் கோமளவல்லிகளுக்கு பதவி பறிபோகும் ஆபத்து!

அச்சுவேலி, ஏப். 21

கோப்பாய தொகுதியில் பல தடவைகள் தமிழரசுக் கட்சியிடம் தோல்விகண்ட தமிழ் காங்கிரஸ் அபேட்சகரின் நெருங்கிய உறவினரான ஆசிரியர் ஒருவரின் கார் இலக்கம் ஈ. எல். 9139.

இக்காரில் தமிழ் காங்கிரஸ் கொடியுடன் இவ்வாசிரியர் ஓடித்திரிவதை எவரும் பகிரங்கமாகக் காண்கின்றனர். காலைதொட்டு நள்ளிரவு வரை தேர்தல் பிரசாரம் செய்வதற்கு ஆட்களை ஏற்றிப்பறிக்கும் வேலையில் இவ்வாசிரியர் ஈடுபட்டுள்ளார்.

இக்காரில் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தேடச் செல்பவர்களில் இரு பயிற்றப்பட்ட ஆசிரியைகளும் இடம்பெற்றிருக்கிறார்கள். கடந்த தேர்தல்களிலும் இந்தத் தேர்தலிலும் இவ் இரு ஆசிரியர்களும பகிரங்கமாக வீடுவீடாகச் சென்று ஆதரவு தேடுகின்றார்கள்.

இவர்கள் இருவரின் நடவடிக்கைகள்பற்றி இவர்களின் அச்சுவேலி மகா வித்தியாலய அதிபர் அவர்கட்கும்

(4ம் பக்கம் பார்க்க)

## கடலிலும் மூவர்ணக்கொடி

திருகோணமலை, ஏப், 21

இங்குள்ள சில மீன்பிடி இயந்திர வள்ளங்களிலும் தமிழரசு மூவர்ணக்கொடி சலசலத்துப் பறந்துகொண்டிருக்கின்றது.

கடற்காற்றுக்கு எடுப்பாகப் பறந்து கொண்டிருக்கும் மூவர்ணக்கொடியுடன் கடலிலே செல்லுகின்ற வள்ளங்களை கோணேசர் கோவிலிலே இருந்துகொண்டு அழகாகக் காணமுடிகின்றது.

அண்மையில் தமிழரசு அபிமானியொருவரது புது மீன்பிடி இயந்திர வள்ளம் வெள்ளோட்டத்துக்கு விட்ட சமயத்தில், வள்ளம் முழுவதையும் தமிழரசின் மூவர்ணக் கொடி அலங்காரங்கள் நிறைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

## கிளிநொச்சி விவசாயிகள் பரிதவிப்பு! பிரதமர் டட்லி சேனநாயக்கா கைவிரிப்பு!

கரைச்சி. ஏப்: 21

வட்டக்கச்சி, இராமனுதபுரம், உமையாள்புரம், ஆனையிரவு, தட்டுவன்கொட்டி, கோரக்கண்கட்டு, புலிங்கதேவன் முறிப்பு, கரவெட்டித்திடல், புளியம்பொக்கணை, கண்டாவளை, பன்றிசுட்டான், அம்பாள்புரம், தருமபுரம், முரசுமோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள். சமாதான நீதவர்ன் இன்றி பெரும் அவதிப்படுகின்றார்கள்.

சமாதான நீதவான் ஒருவரின் கையெழுத்தை பெறுவதாக இருந்தால் இப்பகுதி விவசாயிகள் தம் ஒரு நாள் வேலையை இழந்து ஊதியத்தையும் இழந்து செல்ல வேண்டிய கஷ்டமான நிலை உருவாகியுள்ளது.

இது விஷயமாக சுமார் இரு வருஷங்களுக்கு மேலாக நீதி மந்திரிக்கும், பிரதமமந்திரிக்கும், வடமாகாணத்தை சேர்ந்த கிராம சபைத் தலைவர்கள், பட்டினசபைத்தலைவர்கள், கரைச்சிப்பகுதி கிராம முன்னேற்ற சங்கங்கள்; பயிர்ச்செய்கைக் குழுக்கள், கிளிநொச்சி எம்.பி. உட்பட சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பொது ஸ்தாபனங்கள் பிரபல சமூக சேவையாளர் ஒருவரை சிபார்சு செய்தும், இன்றுவரை ஆவன செய்யப்படவில்லையாம்.

விவசாயிகளின் கோரிக்கைக்கு, ஊக்கமும், உதவியும் கொடுப்பதாக பெருமையாக கூறிக்கொள்ளும் டட்லி அரசாங்கம், கிளிநொச்சித் தொகுதி விவசாயிகள் கோரிக்கைக்கு மதிப்புக் கொடுக்காதது ஏன்? பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா அவர்களும், நீதிமந்திரி செனட்டர் எ. எவ். விஜமானே அவர்களும் இது விடயத்தில் உடனடியாக நேரடி கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் நீதியின் சார்பில், மனிதப்பண்பின் சார்பில், இந்த அவசர வேண்டுகோளை விடுகின்றார்கள்.

கச்சேரிமுறை மாற்றம்:

## கூட்டுக் கட்சி அறிவிப்பு தமிழரசுக்கு ஒரு வெற்றி!

### அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு நிருபர்)

இன்றுள்ள கச்சேரி நிர்வாக முறையை மாற்றியமைத்து நாட்டின் நிர்வாகத்தை அந்தந்தப் பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிக்க மக்கள் மன்றங்கள் நிறுவப்படுமென கூட்டுக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? இது தமிழரசுக் கட்சியின் விடாப்பிடியான கோரிக்கைக்கு கிடைத்த ஒரு வெற்றி என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தமிழரசுக் கட்சியினர், இப்போதைய நிர்வாக அமைப்பான கச்சேரி முறை முற்றாக மாற்றியமைக்கப்பட்டு அந்தந்த பகுதி நிர்வாகம் அவ்வப்பகுதி மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் அப்போதுதான் இந்நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலவ முடியுமென்றும் கூறி வருகிறார்களல்லவா?

இந்த நோக்கத்துடன் 1968ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் தூண்டுதலால் மாவட்ட சபை மசோதா கொண்டுவரப்பட்ட போது அதை முழுமுரமாக எதிர்த்த கூட்டுக் கட்சிகள் இப்போது கச்சேரி முறை மாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதை தங்கள் விஞ்ஞாபனத்திலும் சேர்த்துள்ளனர். கச்சேரிக்குப்பதிலாக தாங்கள் நிறுவப் போகும் அமைப்புக்கு 'மக்கள் மன்றம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கச்சேரி நிர்வாகம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதே தமது நோக்கம் என்றும் கச்சேரிக்குப் பதிலாக நிறுவப்படும் அமைப்புக்கு எந்தப் பெயரைச் சூட்டினாலும் தமக்கு ஆட்சேபனையில்லையென்றும் தமிழரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

கச்சேரி முறையை மாற்றியமைந்து நிர்வாகத்தைப் பரவலாக்குவோம் என்ற உறுதிமொழி கூட்டுக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம பெற்றிருப்பது தமிழரசுக் கட்சியின் விடாப்பிடியான தர்ம நியாயமான கோரிக்கைகளை-சிங்களக் கட்சிகள் எப்படியும் ஏற்றே தீரவேண்டி வரும் என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

## முஸ்லீம்கள் ஆதரவு மாணிக்க வாசகருக்கே!

ஓட்டமாவடி, ஏப். 21

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கல்குடா பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முன்னைநாள் எம்.பி. தேவநாயகம் அவர்களை முழுக்க முழுக்க ஆதரித்த

(4ம் பக்கம் பார்க்க)

தேர்தல் அதிர்வெடி:


## வடக்கிருக்கப் போகிறார்!

'வடக்கு வாழ வேண்டுமானால் தமிழ காங்கிரசை ஆதரியுங்கள் என்று கிளிநொச்சியில் திரு. பொன்னம்பலம் பேசியிருக்கிறாரே!

'ஆமாம், அகில இலங்கைத் தமிழர் ஒற்றுமைக்காக குளம் குளமாக கண்ணீர் வடிக்கும் அவரது ஆஷாட பூதித்தனத்தை அவரே அம்பலப்படுத்திவிட்டார்—1948ல் மலையகத் தமிழரையும் யாழ்ப்பாணத் தமிழரையும் பிரித்தார். இன்று கிழக்கு மாகாணத் தமிழரையும் வடமாகாணத் தமிழரையும் தனது சுயநலத்துக்காகப் பிரிக்கப் பார்க்கிறார்! இந்த ஏமாற்று அரசியல் வாதியை வடக்கிருக்கும்படி செய்யப் போகிறார்கள் மே 27ல் யாழ்ப்பாணத்தொகுதி மக்கள்.'

## கன்னித்தமிழுக்காக உழைப்பது எமது கொள்கை! கல்லால் அடிப்பது காங்கிரஸ் கொள்கை!

'தமிழரசுக் கட்சியை வடமாகாணத்தில் மட்டும் எதிர்த்துப் போட்டியிடும், 'அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்' யு. என். பி. யின் வடபகுதிக்கிளையே தவிர 'காங்கிரஸ்' என்றொரு கட்சியல்ல... எனவேதான் அவர்களுக்கென்றொரு கொள்கையில்லை. எமது கட்சி தமிழ் பல்கலைக்கழகம் என்றால், அவர்கள் இந்து—அல்லது இராமநாதன் பல்கலைக்கழகமென்பார்கள். 'இணைப் பாட்சி'தான் இந் நாட்டுக்கு நல்லது என்று எமது கட்சி கூறினால், அவர்கள்



ஒற்றையாட்சியே நல்லது என்பார்கள் இப்படியே தமிழரசுக் கட்சி எதைக் கேட்டாலும் அதை எதிர்த்து 'சறுக்காக்கட்டை' போடுவதுதான் அவர்களது கொள்கை. இன்னொரு கொள்கையுண்டு... மண் போத்தலால் எறிவது... கல்லால் அடிப்பது. கையாலாகாதவர்கள் வேறு எதைத்தான் செய்வார்கள்?

எமக்கு அன்றாடம் தேவைப்படும் காசுத்தாள்களில் கூட 'இலங்கை மத்தியவங்கி' யென்று தமிழில் இடம்பெறச் செய்ய பல தடவைகள் வாதாடி தமிழிலும் பொறிக்கச் செய்தவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய தமிழரசுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21

தமிழரசுக்கட்சியின் பிரச்சாரக் கூட்டங்கள் பருத்தித்துறை கடற்கரை மைதானம், மாவிட்டபுரம், கரணவாய், வேலணை ஆகிய இடங்களில் முறையே திருவாளர்கள் க. துரைரத்தினம், திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், க. ஜெயக்கொடி, பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோரை ஆதரித்து இன்று (22-4-70) நடைபெறுகின்றன. இவை தவிர சண்டிலிப்பாயில் உடுவில் தொகுதி தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் சிவனேசனுடன் தமிழரசு வேட்பாளர் திரு. தர்மலிங்கம் ஒரே மேடையில் கொள்கை விளக்கமளிக்கிறார்.

## சிறுவர்களைச் சிந்திக்கவைத்தார் செயல்வீரர் நவம்!

(கைதடி நிருபர்)

சாவகச்சேரி தொகுதியைச் சேர்ந்த கைதடி என்னும் கிராமத்தில் இது நடந்தது. மக்களன்பன் என்றும் கடமை வீரன் என்றும் அன்புடனும் அபிமானத்துடனும் அழைக்கப்படும் திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள். தம் தொகுதியிலுள்ள வாக்காளர்களை நேரிலே சந்திப்பதற்காகக் கைதடிக்குச் சென்றிருந்தார். தன்னுடைய வீட்டிற்கண்மையில் கடமை வீரரும் அவருடைய தொண்டர்களும் வந்துவிட்டதை அறிந்த தமிழாசிரியர் ஒருவர், தன்னுடைய பிள்ளைகள் நால்வரை வெளியே அனுப்பி, 'குமாரசாமி வாழ்க' எனக் கோஷமிடும்படி செய்தார்; தந்தையின் சொற்படி மைந்தர்கள் நால்வரும். கடமை வீரருக்குச் சற்று முன்னால் சென்று 'குமாரசாமி வாழ்க' எனக் குரல் எழுப்பினர்.

கோபம் என்பதை அறியாத கடமை வீரர் தன் வழக்கமான புன்சிரிப்புடன் அந்தச் சிறுவர்களை அணுகினார். 'பிள்ளைகளே குமாரசாமி வாழவேண்டும் என்கின்றீர்கள். நானும அதை விரும்புகின்றேன். ஆனால் அவர் மட்டும் வாழ்ந்தால் போதாது; அவரும் வாழ வேண்டும்; நீங்களும் வாழ வேண்டும்; உங்கள் இனமான தமிழ் இனமும் வாழ வேண்டும், நீங்களும் தமி

(2ம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்புத் தொகுதியில் எட்டப்பர் கூட்டத்துக்கு இனி இடமில்லை

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

''பைந்தமிழ்த் தொகுதியாம் பட்டிருப்பில் இனி எட்டப்பர் கூட்டத்திற்கு இடம் கொடோம்'' இவ்வாறு பட்டிருப்பு தொகுதியை சேர்ந்த திருப்பழுகாமம் கிராமத்தில் மேற்படி கிராமத்தலைவர் திரு. முருகேசபிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த ஒரு கூட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் தலைவர் முன் உறுதி பூண்டனர்.

பட்டிருப்பு தொகுதியைச் சேர்ந்த திருப்பழுகாமம் மக்கள் பிரதிநிதியாக யாரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது என்ற முடிவை எடுக்கும் முகமாய் மேற்படி கிராமத்தலைவர் திரு. கதிரேசபிள்ளை அவர்கள் தலைமையில்

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## விஷ ஜந்துக்களை அடித்துக்கொல்லுவீர்!

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு—அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

ஒற்றுமையின் வலிவை உணரவைக்கும் இதுபோன்ற கருத்துக்கள் பழமொழிகள், மெத்தவுண்டு தமிழிலே.

ஒற்றுமையின் சக்தியை—ஒற்றுமையின் அவசியத்தை—தமிழ் பேசும் மக்களுக்கு நாம் எடுத்துக் கூறவேண்டிய அவசியமே இல்லை.

அவர்கள் அதை அனுபவரீதியாகவே புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

1956ம் ஆண்டுக்கு முன் நெல்லிக்காய் மூட்டைகள் போல, மாகாணப் பிரிவினை, மாவட்டப் பிரிவினை, பிரதேசப்பிரிவினை, மதப்பிரிவினை என்று பல்வேறு பிரிவினை பேசி பிளவுபட்டிருந்த இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் பலம் எவ்வாறு சிதறிச் சிரழிந்து கிடந்தது என்பதை நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

தன் பலத்தை தானே உணராத ஆனைபோல இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அடங்கிக் கிடந்தார்கள்—உரிமைகள் பிடுங்கப்பட்டபோது அதை எதிர்த்துப் போராடும் வலுவற்று இருந்தார்கள்.

பிரிவினை பேசி, தமிழ் பேசும் இனத்தைப் பிளவுபடுத்தி யூ. என். பிக்கு பாதம் தாங்கி தங்கள் சுயநலத்தை—பதவி வேட்டையை—நடத்திக் கொண்டிருந்தது 1956க்கு முன் கிழக்கிலும் வடக்கிலும் ஒரு கும்பல்!

கிழக்கே இதைக் கச்சிதமாகச் செய்துவந்தவர்கள் நல்லையா, எட்டப்பன் எதிர்மன்னசிங்கம் போன்ற இனத்துரோகிகள். யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் என்ற துவேஷமே அவர்களது அரசியலின் ஆணிவேராக இருந்துவந்தது.

வடக்கே இதே பிரிவினைக் கோஷத்தை எழுப்பி, மலைநாட்டான் யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் என்ற பிரதேச வெறியை வளர்த்து அதிலே நீச்சல் அடித்தார்கள் தமிழ் காங்கிரஸ் தலைவர்கள்.

தமிழ் பேசும் மக்களை பிரித்து பிளவுபடுத்தி அதிலே சுக போகம் அனுபவித்த இந்த இனத்துரோகிகளை மக்கள் முன் நிறுத்தி அவர்கள் எப்படிபட்டவர்கள் என்பதை தோலுரித்து காட்டியது தமிழரசுக் கட்சி!

நாம் எல்லாம் தமிழ் மக்கள்; நமக்குள்ளே பிரிவு இல்லை. இணைந்து வாழ்வோம்; இயக்கத்தில் சேர்வோம்; இன்பத் தமிழகம் படைப்போம் என்று அழைத்தது தமிழரசுக் கட்சி.

தமிழரசுக் கட்சியின் உழைப்பு அவம் போகவில்லை—தமிழ் பேசும் மக்கள் தமது நிலையை உணர்ந்து 1956ம் ஆண்டு; பிரதேச மதப்பிரிவினைச் சக்திகளின் முதுகெலும்பை ஒடித் துளறிந்து ஓட விரட்டியடித்தனர். தமிழரசுக் கட்சியின் கீழ் வடக்கும், கிழக்கும், மலையகமும் ஒன்றாக இணைந்தன. 'ஈழத்தமிழகம்' உருவாகியது.

அன்று ஏற்பட்ட தமிழின ஒருமைப்பாடு உறுதியாக வேரூன்றி வளர்ந்துவருவதை 1960, 1965 பொதுத் தேர்தல்களும், தமிழுரிமைப் போராட்டங்களும் நிரூபித்திருக்கின்றன.

ஆனால், மீண்டும் இப்பொழுது எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறும் ஒரே நோக்குடன், வடக்கு, கிழக்கு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என்ற பிரிவினை வாதங்களை—விஷவித்துக்களை—பரப்புவதில் தமிழின விரோதிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிழக்கில், யாழ்ப்பாணத்தான், மட்டுநகரான் என்ற பிரதேச வெறியைத் தூண்டிவிட கல்குடா தேவநாயகங்களும், கிண்ணக் கட்சி எதிர் மன்னசிங்கத்தின் தம்பிகளும், ராஜன் செல்வநாயகங்களும் தலையால் கிடங்கு கிண்டுகின்றனர்—தமிழினத்தை தழை கருவறுக்க நிற்கும் சிங்களக் கட்சியான யூ. என். பி. உதவியுடன்.

வடக்கிலே, தமிழ் காங்கிரஸ் இந்த வேலையை செய்கிறது. வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை தமிழரசுக் கட்சிதான் எதிர்க்கிறது; வடக்கு வாழ வேண்டுமானால் தமிழ் காங்கிரசையே அனுப்புங்கள் என்று பிரதேசப் பிரிவினையை தூண்டிவிட்டு வாக்குப் பெறும் நோக்குடன் அலறியிருக்கிறார் வட இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர்—கிளிநொச்சி ரெட்ரிக்கோ மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில்!

எதுசொல்லியும் மக்களை இனி ஏமாற்ற முடியாது என்பதை நன்றாக உணர்ந்துகொண்ட திரு. பொன்னம்பலம், பிரதேச உணர்வைத் தூண்டிவிட்டாவது தேர்தலில் வென்றுவிடலாமா என்று கனவுகாணுகிறார்!

தமிழரசுக் கட்சியின் சீரிய தலைமையில் ஒன்றுபட்டிருக்கும் தமிழினத்தை கூறுபோட்டழிக்க கிழக்கில் யூ. என். பியும் வடக்கில் அதன் இளைக் கட்சியாகிய தமிழ் காங்கிரசும் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றன.

யூ. என். பியும் தமிழ் காங்கிரசும் கூட்டாகவிரித்துள்ள இந்தச் சூழ்ச்சி வலையை அறுத்தெறிவது தமிழ் பேசும் மக்களின் முழு முதற்கடமையாகும். உரிமைக்கு போராடு முன் உள்ளிருக்கும் விஷ ஜந்துக்களை அடித்துக் கொல்ல வேண்டியது அவசியம் என்பதை தமிழின மக்களுக்கு நாம் சுட்டிக்காட்டவேண்டிய அவசியமில்லை.

தமிழ் பேசும் மக்கள் அனைவரும், வடக்கு, கிழக்கு என்ற பேதமின்றி ஓர் அமைப்பில் இணைந்து நிற்கும் வரைதான் தமிழினம் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ முடியும்—அந்த ஒற்றுமைக்கு வெடிவைக்கப்பட்டால், தமிழினம் சிங்களப் பெரு வெள்ளத்துள் மூழ்கி அழிந்துவிடுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

எனவே தமிழினத்தை அழிக்க நினைக்கும் இந்தக் கோடரிக் காம்புகள்—விஷ ஜந்துக்கள் மீண்டும் தலையெடுக்காமல் மே 27ல் தமிழ் பேசும் மக்கள் தங்கள் வாக்குச் சீட்டால் மரண அடி கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

# யூ. என். பியின் மாயப் போர்வையில் தமிழினம் இனி ஒருபோதும் சிக்காது!

## மண்கும்பானில் பண்டிதர் தெளிவுரை!

யாழ்ப்பாணம், ஏப். 21

''இன்று தமிழர் மத்தியில் மூன்று பெரும் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி போட்டி போட்டியிடுகின்றன. யாழ்ப்பாணத் தொகுதி தேர்தலை நோக்குமிடத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுடைய ஆதரவுடன் திரு. அல்பிரெட் துரையப்பா போட்டியிடுகிறார். ஏனைய சில தொகுதிகளில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணியினர் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினுடைய கிளையாகிய தமிழ் காங்கிரஸ் வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தில் ஐக்கியதேசியக் கட்சிநேரடியாகவும் போட்டியிடுகின்றன. எல்லாக் கட்சிகளும் சேர்ந்து தமிழர் மத்தியிலே மிகச் செல்வாக்கான இடத்தைப் பிடித்துக்கொண்ட தமிழரசுக் கட்சியை எப்படியும் முறியடிக்க முயற்சிகள் பல செய்து வருகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த சில நாட் பிரசாரங்களைக் கவனிக்குமிடத்து தமிழரசுக் கட்சி எதிர்த்து வருகின்ற ஒற்றை ஆட்சி அமைப்புத் திட்டம் இந்த நாட்டில் தமிழர் சுதந்திரத்துடனும் மனிதத் தன்மையுடனும் வாழ்வதற்கு முட்டுக்கட்டையானது—அத்துடன் உதவாக்கரையானது என்பது தெளிவாகிவிட்டது'' என்று ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் மண்கும்பானில் திரு. செ. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் ''இந்த நாட்டில் தமிழ் மக்கள் தன் மானத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழவேண்டுமாயின் அற்கு தமிழரசுக் கட்சி வலியுறுத்தி வருகின்ற சமஷ்டி அரசியலே சிறந்ததாகும். 1970ம் ஆண்டுத் தேர்தல் தமிழ்க் காங்கிரசிற்கு சிறந்த ஒரு பாடத்தைக் கற்பிக்கப் போகின்றது. இனிமேலும் தமிழ் மக்களை ஐக்கிய தேசியக் கட்சியினுடைய போர்வையில் நின்று காட்டிக் கொடுக்க ஒரு சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் நிச்சயமாக கொடுக்க மாட்டார்கள் என்பதை இன்றைய தேர்தல் நிலை நன்றாக எமக்குக் காட்டுகின்றது.

1970 ஆண்டுத் தேர்தல் தமிழரசுக் கட்சியின் அண்மைக்கால வரலாறை திருப்பு முகமாக அமைக்கின்ற அதே நேரத்தில் தமிழ்க் காங்கிரசின் அரசியல் அத்தியாயம் முடிவடையச் செய்கிறது.

1970-ம் ஆண்டிலும் கூட சில சுயேச்சை வாதிகள் பணத்தால் மக்கள் வாக்குரிமையை விலைக்கு வாங்கிவிடலாமென கங்கணம் கட்டி அவர்கள் நடத்தி வருகின்ற திருவிளையாடல்களை இந்த ஊர்காவற்றுறைத் தொகுதியில் நாம் கண்டு வெட்கப்படுகின்றோம். அத்துடன் மக்களும் இவர்களை சரியாகப் புரிந்துகொண்டு நல்ல பாடம் கற்பிக்க இருக்கிறார்கள் என்பதையும் நாம் உணருகிறோம். கடந்த தேர்தலில பணத்தால் வாக்குகளை வாங்கலாம் என்று முன்வந்தவர்களுக்கு மக்கள் கற்பித்த பாடத்தை இந்த சுயேச்சைவாதிகள் இன்றும் உணரவில்லையா?

தேர்தல் நெருங்க நெருங்க இவர்கள் பரப்பி வருகின்ற பொய் பிரசாரங்களும் துவேஷங்களும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. ஆனால் இவை தேர்தல் வரையும்தான். தேர்தல் முடிந்ததும் இவர்களுடைய பெயரையே சிலவேளை மக்கள் மறந்துவிடுவார்கள்;

திருவாளர்கள் அல்லைப்பிட்டி கிராமச்சபை தலைவர் திரு. செ. தவவிநாயகம், என். கே. தருமலிங்கம், நா. சோமசுந்தர ஐயர், வை. குணரத்தினம் ஆகியோர்களும் பேசினார்கள்.

## மார்டினுக்கு பி. எம். ஜோன், ஜி. நல்லையா ஆதரவு!

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மார்ட்டினுக்கு ஆதரவு பெருகிவருகிறது.

திரு. மார்ட்டினை ஆதரித்து திரு பி. எம். ஜோன் அவர்களும், முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா அவர்களும் உழைத்து வருகிறார்கள்.

18-4-70ல் குருநகரில் நடைபெற்ற தமிழரசு பிரசாரக் கூட்டத்துக்கு திரு. பி.எம். ஜோனும், 19-4-70ல் ஈச்சமோட்டையில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஜி. நல்லையாவும் தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது.

## அளவெட்டியில்

### மாபெரும் கூட்டம்

காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை ஆதரித்து அளவெட்டி தமிழரசுக் கட்சிக் கிளையின் சார்பில் மாபெரும் பிரசாரக் கூட்டம் ஒன்று 23-4-70 வியாழன் மாலை 6-30 மணிக்கு அளவெட்டி கும்பழாவளை விநாயகராலயத்திற்கு அருகாமையில் வைத்திய கலாநிதி இ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பேச்சாளர்:- திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திரு அ. அமிர்தலிங்கம், திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. சு. நடராசா, திரு. மு. திருநாவுக்கரசு, திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. ஆ. தம்பாபிள்ளை மற்றும் பலரும்சொற்பெருக்காற்றுவார்கள்.

——

## சிறுவர்களைச் சிந்திக்க ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ழினமும் வாழவேண்டுமானால், உங்களுக்கென—தமிழ் இனத்துக்கென ஒரு நிலம் இருக்கவேண்டும். அதற்காகத்தான் நானும் எனது கட்சியும் எப்பொதும் பாடுபட்டு வருகின்றோம்' என மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும் விளக்கினார்.

கடமை வீரரின் விளக்கத்லைதக் கருத்துடன் செவிமடுத்த அந்த நால்வரும் அமைதியாக வீடு திரும்பினர். அன்று மாலை கைதடி கிராமத்திற்கூடாகச்சென்ற மாபெரும் தமிழரசு ஊர்வலத்தின் முன்னணியில் அந்த நான்கு சிறுவர்களின் குரலும் 'தமிழினம் வாழ்க! தமிழரசு வாழ்க!' என இடைவிடாது ஒலித்தபடியே இருந்தது.

## நேமிக்கு எதிராக பணமுதலைகள்

திருகோணமலை, ஏப். 21

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்ல கொள்கைகளையும், தமிழின விடுதலைக்குரிய இலட்சியத் திட்டங்களையும் தமிழரசுக் கட்சியின் பெயரால் முன்வைத்து போட்டியிடும் தமிழரசு வேட்பாளர் திரு. பா. நேமிநாதனுக்கு அபரிமிதமான அளவில் கிராமங்களிலும் புதிய குடியேற்றத் திட்டங்களிலும் ஆதரவு பெருகியிருப்பதை அறிந்து பணக்காரக் கட்சிகள் சில இனிமேலும் மக்களிடம் தமது மாய்மாலத்தைக் காட்ட முடியாதென்பதை உணர்ந்து பணத்தை அள்ளி வீசத் தொடங்கியிருக்கின்றன.

மக்களைத் தம்வசப்படுத்தி வாக்குகளைத் தட்டிக்கொள்வதற்காக பணத்தை பணமாகவும், வேறு சில போதைப் பொருட்களின் உருவிலும் மக்கள் மத்தியில் நடமாட விட்டுள்ளனர் அரசியலில் நிலையான கொள்கையை வைத்து பிழைக்க முடியாத சில பச்சோந்திகள்.

''ஆனால் திருகோணமலை தமிழ் மக்கள் இதற்கெல்லாம் வசியப்படும் அரசியலறிவு அற்ற அனைதைகளல்ல. அவர்களது தன்மான உணர்வும், விடுதலை வேட்கையும் பொதுத் தேர்தலின் முடிவின்போது இப்பச்சோந்தி அரசியல் வாதிகளுக்குப் புரியுமென ''தமிழரசுப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

——

## காரைநகரில் தமிழர  வாலிப முன்னணி

காரைநகர், ஏப். 21

வட்டுக்கோட்டைத் தொகுதியின் காரைநகர் தமிழரசு வாலிப முன்னணிக் கிளை 13-4-70 திங்கட்கிழமை பி.ப. 5 மணியளவில் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூக நிலையத்தில் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் தளபதி அமிர்தலிங்கம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவராக திரு. க. அமிர்தசிங்கம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

# அன்று நிராகரித்தார் அறுபதுக்கு நாற்பதை; இன்று ஏற்றுக்கொண்டார் எண்பதுக்கு இருபதை;

## ஜீ. ஜீ.யின் அரசியல் அஞ்ஞானமே தமிழினத்தின் தாழ்வுக்கு காரணம்!

## இணுவில் பொதுக்கூட்டத்தில் தர்மலிங்கம் முழக்கம்!

"பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டபோது சேனநாயகா அறுபதுக்கு நாற்பது தருவதாகக் கூறினார். ஆனால் திரு பொன்னம்பலர் அதை ஏற்க மறுத்தார். திரு பொன்னம்பலத்தின் தீர்க்கதிருஷ்டியற்ற இந்தப் பிடிவாதத்தால் 40 வீதமும்இல்லாமற்போனது, அன்று 40 வீதத்தை ஏற்க மறுத்ததிரு பொன்னம்பலம்தான் இன்று 80 க்கு 20 வீதத்தையுடைய ஒற்றையாட்சி அமைப்பை இறுகத் தழுவிக்கிடக்கிறார்.

இவ்வாறு இணுவில்சந்தை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுப்பிரசாரக்கூட்டத்தில் பேசிய உடுவில் தமிழரசு வேட்பாளர் திரு. வி, தர்மலிங்கம் கூறினார்.

கூட்டத்திற்கு உடுவில் கி. ச. தலைவர் திரு ச. முத்துலிங்கம் தலைமைவகித்தார். அவர் தமது உரையில் கூறியதாவது:-

தமிழ் பேசுமினத்திற்கு இவ்வளவு நெருக்கடியும்கஷ்டமும் ஏற்படக் காரணம் ஒற்றையாட்சியென்று நாம் கூறுகின்ற சோல்பரி அரசியல் திட்ட அமைப்பேயாகும். தமிழினத்திற்கு படுபாதகமான, இந்த அரசியல் அமைப்பு முறையை மாற்றியமைத்து இந்நாட்டில் இணைப்பாட்சி முறையைத் தோற்றுவித்தாலேயொழிய தமிழினத்திற்கு விமோசனமில்லை. டட்லி சேனநாயகா போன்ற சிங்களத் தலைவர்கள் வெளிநாட்டிற்குப் போகும் வேளையிலெல்லாம் உலக சமஷ்டி உருவாகவேண்டுமென்று வலியுறுத்துகின்றார்கள். ஆனால் இந்நாட்டிலே தமிழினத்தைப் படுகுழியில் வீழ்த்தக்கூடிய சட்டமான ஒற்றையாட்சி முறையை மாற்றியமைப்பதற்கு சம்மதிக்கின்றார்களில்லை. எமது கட்சியின் இடைவிடாத தொடர்ச்சியான போராட்டம் காலப்போக்கில்சமஷ்டியாட்சியொன்றை இந்நாட்டில் உருவாக்கியே தீரும். மொழிப் பிரச்சினை, தமிழ்ப் பிரதேசம் சூறையாடப்படுதல், இரண்டும் தீர்வுகாணப் பட்டாலே. பொருளாதார சோசலிஸத்தைப்பற்றி நாம் சிந்திக்க முடியும். இளம் சமுதாயம் அரச உத்தியோகத்தை எதிர்பாராது விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டும். 'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை' என்பது போல தமிழ் மக்கள் விட்ட கண்ணீர் வீண்போகாது, இனத்தின் உரிமையைப் பெற்றே தீருமென்ற நம்பிக்கையோடு தமிழரசுக் கட்சி காட்டிய பாதையில் உழைப்போம், தமிழரசுப் பிரதிநிதிகளை ஏகப் பிரதிநிதிகளாக அனுப்பிவைக்கும்படி வேண்டிக்கொண்டார்.

அடுத்ததாக உடுவில் தொகுதி அபேட்சகரும், அடுத்த பிரதிநிதியாகியவருமான திரு வி. தர்மலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:- நடைபெறவிருக்கின்ற இத்தேர்தல் அதிமுக்கியமானது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னர் இப்படி



யொரு நிலை இருந்ததில்லை. கடந்த பதினைகு ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி என்ன செய்தது......? என்று எதிர்க்கட்சிகளும், நாம் தமிழினத்திற்கு துரோகம் செய்யாது குறைந்தபட்ச உரிமைகளையாவது பெற்றெடுத்திருக்கிறோமென்று தலை நிமிர்ந்து கூறிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே தான் மீண்டும் மக்கள் தீர்ப்பு வழங்கவிருக்கின்ற பொதுத்தேர்தல் வரவிருக்கின்றது.

தனிப்பட்டவொரு தர்மலிங்கமாக நான் வரவில்லை, தமிழரசுக் கட்சியென்றே வருகின்றேன். தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்குச் செய்த சேவைகளை முன் வைத்தே நாம் போட்டியிடுகின்றோம். எனவே நன்கு சிந்தித்து வாக்களியுங்கள். தேர்தலிலே நிற்பது இலட்சியம், கொள்கைக்காக, இன சமுதாய முன்னேற்றததிற்காகவேயன்றி, எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவல்ல... நாம் சுயநலத்திற்காகச் சென்றிருந்தால், எம்மைத் தேடிவந்த பதவிகளைப் பெற்று சுகபோகங்களை அனுபவித்திருக்கலாம், தமிழரசுக் கட்சி தமிழினத்தின் விடுதலைக்காக உருவாக்கப்பட்டவொரு விடுதலை இயக்கம் என்பதை தமிழினம் மறந்துவிடக் கூடாது.

தமிழினத்தை அழித்து ஒழிக்க வேண்டுமென்ற திட்டம் ஆரம்பத்திலேயே உருவாக்கப்பட்டுவிட்டதுபெரிய சேனநாயகா விரித்த வலையில் பொன்னம்பலம் வீழ்ந்து, பத்து லட்சம் மலையகத் தமிழரை நாடற்றவர்களாக்கப்பட்டதோடு தமிழினத்தின் கதை வேறு விதமாயமைந்து விட்டது. எனவே 56க்கு முன்னர் தமிழர்கள் உரிமை பெற்றிருந்தார்களென்றும், ஒளி மயமான காலமாயிருந்ததென்றும் பொன்னம்பலம் கூறித்திரிவது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே யென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு இனம் தனது சுய நிர்ணய உரிமையை நிலைநாட்ட பெரும்பான்மைப் பலத்தோடு இருக்கவேண்டும். 56ம் ஆண்டுக்குப் பின் எமது கட்சி ஓரளவு பெரும்பான்மைப் பலத்தோடு இருந்த காரணத்தாலேயே குறிப்பிடத்தக்க சில உரிமைகளையாவது வாதாடிப் பெற முடிந்தது. பொன்னம்பலம் ஐம்பதுக்கைம்பது கேட்டபோது சேனநாயகா '60:40' தருவதாகக் கூறினார். ஆனால் பொன்னம்பலம் மறுத்தார். அவரது பிடிவாதக் குணத்தால் 40 வீதமும் இல்லாமற் போனது.

அன்று 40 வீதத்தையாவது பெற்றிருந்தால் தமிழினத்தின் வாழ்வும், வளமும், எப்படியிருந்திருக்குமென்பதை, நாம் கூறித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தமிழரசுக் கட்சியின் பலத்தைக் கண்ட பண்டாரநாயகா 57ம் ஆண்டுத் தந்தை செல்வாவோடு, ஒப்பந்தத்தின் மூலம் இரு இனங்களுக்குமிடையே ஒரு சுமுக நிலையை உருவாக்க முன் வந்தார், அதையும் உருவாகிய நடைமுறையில் வராமல் செய்து கிழிக்கச் செய்தவர்கள் தெற்கே, யு. என். பி. யும், வடக்கே பொன்னம்பலமுமென்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சிங்களக் குடியேற்ற விடயத்தில், தான் அமைச்சராக இருந்த போது, மிகக் குறைவானவர்களே குடியேறியிருந்ததாக பொன்னம்பலம் கூறுவது முழுப்பொய். 56ம் ஆண்டு வரை நடைபெற்ற குடியேற்றம் வாசற்படிவரை வெள்ளம் வந்த அவல நிலையிலேயே இருந்தது. இதன் பின்னரே பொன்னம்பலத்தில்நம்பிக்கையிழந்து தமிழ் மக்கற் தமிழரசுக் கட்சியிடம் தங்களது தலைவிதியை ஒப்படைத்தார்கள். நாம் எடுத்துக் கொண்ட இடைவிடாத முயற்சியினால் திட்டமிட்ட குடியேற்றத்தை தடுத்து நிறுத்தி தமிழ் பிரதேசத்தைக் காப்பாற்றியிருக்கின்றோம். எனவேதான் எமது கட்சியினரை மீண்டும் ஒரே குரலில் உரிமைக் குரலெழுப்ப அனுப்பிவையுங்கள், இவ்வாறு தர்மலிங்கம் கூறினார்.

அடுத்ததாகபொதுச்செயலாளர் அ. அமிர்தலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது:- அடுத்த பொதுத் தேர்தல் தமிழர்களைப் பொறுத்தவரையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தென்பதை வெளிநாட்டுப் பத்திரிகைகள் எடுத்துக் காட்டியிருப்பதை படித்திருப்பீர்கள். வரும் தேர்தலைப்பற்றி இடதுசாரிப் போக்குடைய பத்திரிகையொன்று அடுத்த அரசாங்கத்தை அமைப்பதாயிருந்தால் தமிழரசின் ஆதரவு தேவைப்படுமென்ற அறிகுறி தென்படுவதாகக் குறிப்பிட்டு எழுதியிருக்கின்றது. இது சிங்களத் தலைவர்களும் தற்பொழுது தாங்கள் பெரும் பான்மையாக வருவோமென்ற பிரச்சாரத்தை நிறுத்திவிட்டார்கள், தமிழரசுக் கட்சியின் ஆதரவை இரு கட்சிகளும் பெற வேண்டிவருமென்ற உள் கருத்தோடுதான் சிறுபான்மையினத்தை கவரக்கூடிய பிரச்சாரத்தை செய்கின்றார்களென்று அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளதை தமிழினம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைய நிலை இதுவே.

நாம் கட்டுக்கோப்பான முறையிலே தமிழரசுக் கட்சியையே தெரிவு செய்யவேண்டும். யூ. என். பியின் மறுபதிப்பான, ஊதுகுழலான, காங்கிரஸ்காரரால் உரிமையைப் பெற்றுவிட முடியாது, வட இலங்கை யூ. என். பி. தான் காங்கிரஸென்பதை யூ. என். பி.க்கு எதிராகப் போட்டியிடாமல் விட்டதிருந்தே சுயரூபம் தெரிந்து விட்டது.

காங்கிரசுக்கு வாக்களித்தால், யு. என். பிக்கும், இடது சாரிகளுக்கு வாக்களித்தால் சிறிமா ஆட்சி பீடம் ஏறவுமே வாய்ப்பளிக்கும். தமிழரசுக்கு அளிக்கும் வாக்கு இழந்த உரிமைகளை பெறுவதற்கு வாய்ப்பு அளிப்பதாகும் 56ம் ஆண்டிலே சமஷ்டி இலட்சியம் பேசிக்கொண்டு வந்த சிவனேசன் 60 ல் அபேட்சகராக விடவில்லையென்ற காரணத்தால் சுயேச்சைத் தமிழரசு என்றார்...... 65 லே காங்கிரசுக்குப்போனார். இதுதான் அவரது கடந்த கால நிலை, காங்கிரசில் ஒரு விசித்திரம். கட்சி அபேட்சகரை நிறுத்துவதில்லை. அபேட்சகர்தானே தீர்மானித்துவிட்டு அவர்களது நிர்ப்பந்தத்தினால் கட்சி எற்றுக்கொள்வது...... இதுதான் காங்கிரசின் உழுத்துப்போன ஒருமுறையாக இருந்து வருவதை தமிழ் மக்கள் நன்குணர்ந்து விடுதலை வேட்கைகொண்ட இலட்சியவாதிகள் நிறைந்த தமிழரசுக் குடும்பத்தை ஒரே குரலெழுப்பக் கூடியதாக நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள்."

---

# மொக்கனுக்கு ஒரு கடிதம்

'மொக்கன்' என்ற பெயரில் தினபதி 'அத்தாணி மண்டபத்தில்' ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். அழகான பெயர்.

மொக்கா,

உன் கடிதத்தில் நான் ரசித்த வரிகள் இவை:—

'அற்ப மானிடர் அதுவும் சாராயம் குடித்துக் கோழி இறைச்சி தின்னும் மானிடர் அரும்பெரும் கடவுள்களின் பெயரைச் சூடுவது சைவத்தைக் கேலி பண்ணுவது ஆகாதா?'

மொக்கா,

தினபதியார் இறைச்சி சாப்பிடுகிறவர் என்பதும் மீன் சாப்பிடுகிறவர் என்பதும் 'சிவ' நாமத்தை தன் பெயராக வைத்திருக்கிறவர் என்பதும் தெரிந்து அந்த மனிதரைச் சரியாக ஒரு பிடி பிடித்துவிட்டாய்—நீ வாழ்க!

தினபதியார் முருகனைக் கேலிச் சித்திரமாக வரைந்த ஒரு கொடுமையை மட்டும் தானே 'சுதந்திரன்' பத்திரிகை சாடி வருகிறது!—நீ கெட்டிக்கார மொக்கன் தினபதியார் சைவத்துக்கு இழைக்கும் இன்னொரு அநியாயத்தையும் கண்டு பிடித்து தினபதியிலேயே அம்பலப் படுத்திவிட்டாய்!

மொக்கா,

'சைவ சமயத்தில் சுதந்திரம் உண்டாம்...இறைவனை பித்தா என்று கூட அழைக்கலாமாம்' என்று நீ எழுதும் போது கூட தினபதியாரைத் தானே கிண்டல் செய்கிறாய்! 'அந்தத் துணிச்சலில்தான் தினபதியார் கேலிச்சித்திரமாக முருகனைப்போட்டார்' என்பது தானே உன்வாதம்? இறைவனை இறைவன் என்று அறியாதபோதுதான். சுந்தரமூர்த்தி நாயனார் 'பித்தா!' என்று அழைத்தார். அப்புறம் இறைவனே உத்தரவு போட்ட போது அழைத்தார். ஆனால் தினபதியார் முருகனைத் தெரியாமல் கேலிச் சித்திரம் போடவும் இல்லை; தன்னை ஒரு கேலிச் சித்திரமாக வரையச் சொல்லி தினபதியாரிடம் தமிழ் முருகன் கேட்கவும் இல்லை... என்றாலும் சரியாக இலக்கியம், புராணம் தெரியாத தமிழ் எழுத்தாளர் தானே தினபதியார்...... பித்தா என்று யாரோ இறைவனை அழைத்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறார். அந்தத் துணிச்சலோடு கேலிச் சித்திரம் போட்டுவிட்டார்........ மொக்கா, உன் கடிதத்தில் நீ தினபதியாரைத் தாக்கி இருக்கும் அழகே தனி...... போ!

மொக்கா,

முருகன் தமிழர் தெய்வங்களிலெல்லாம் தனியான அழகுடையவன்... 'அழகன்' என்று அவனுக்கு பேர்கூட உண்டு; ஆனால் தினபதியார் வெளியிட்ட கார்ட்டூன் முருகனைப் பார்த்த எவனாவது தன் வாழ்க்கையில் 'அழகன்' என்று முருகனை எந்தக் காலத்திலாவது அழைப்பானா! கோணல் மாணலான கோடுகளா அழகுக் குமரன்...? முருகனின் அழகையே மொத்தத்தில் நையாண்டி செய்தது போலத்தானே — இல்லையா?

மொக்கா,

பாவம்...... தினபதியார் இன்று உன்னுடைய கிண்டல்களையே புரிந்து கொள்ளாமல் அவற்றை தினபதியிலேயே வெளியிட்டு தானே முட்டாள் பட்டம் கட்டிக் கொண்டார் ......எவ்வளவு பெரிய பரிதாபம்!

ஒருகாலத்தில 'மூளைக்கு' மூளையாக இருந்தவர் இன்று மொக்கனுக்கு மொக்கனாக ஆகும் நிலை பரிதாபந் தானடா?

மொக்கா,

விதி யாரைத்தான் விட்டது? போ!

'அறிவாளி.'

---

## மக்கள் கருத்து

### தினபதியின் தெய்வ நிந்தனையை எதிர்க்கின்றோம்

கைதடி இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையா 3-4-1970ல் வெளியான தினபதியில் வெளிவந்த கேலிச் சித்திரம் சம்பந்தமாக சுதந்திரனில் வெளியிட்ட கருத்துக்களை முழு மனதுடன் ஏற்று தினபதியை இனிமேல் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளோம். அரசியலில் புனிதத் தன்மையுள்ளவற்றை தங்கள் மனம்போனபடி பிரசுரித்த தினபதியை ஏனைய சைவ இயக்கங்களும் பகிஷ்கரிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இவற்றை வெளியிடும் சுதந்திரனுக்கு சைவ மக்கள் சார்பில் எமது நன்றி.

எஸ், இராமையா,
தலைவர்:
சைவ வாலிபர் இயக்கம்,
புசல்லாவ.

★

தினபதியை நாம் இனிமேல் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டோம்; சைவத்தை துச்சமென மதிக்கும் தினபதியே உனது ஆயுளும் நெருங்குகின்றது போலும். கைதடி இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையாவின் சுதந்திரனில் வெளியிட்ட கருத்துக்களை சைவ மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எமது அவா.

—இரா. சர்வ ஈஸ்வரன்,
இணைச்செயலாளர்;
சைவ அருள் நெறிக் கழகம்,
பேராதனை.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN



## விடுதலைப் படையுடன் இணைகிறது வவுனியா

# முல்லைத்தீவு மக்களின் பேரெழுச்சி! செல்லத்தம்பு வெற்றி உறுதி!

முல்லைத்தீவு, ஏப். 21

வவுனியாத் தொகுதியே இதுவரை கண்டறியாத மிகப் பிரமாண்டமான எழுச்சி ஊர்வலம் ஒன்று வவுனியா தொகுதி வேட்பாளர் திரு. செல்லத்தம்புவை ஆதரித்து முல்லைத்தீவில் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் திரண்ட மக்கள் வெள்ளத்தையும் அம்மக்களது எழுச்சியையும் கண்டவர்கள் வவுனியா தொகுதியில் தமிழரசுக்கட்சியின் ஜெயக்கொடி மே 28ம் நாளில் பறப்பது உறுதியென்று வாய்விட்டுக் கூறுகின்றனர்.

வன்னித் தொகுதியின் பல கிராமங்களிலும் இருந்து இளைஞர் சேனை அணிவகுத்து 18-4-70ந் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு முள்ளியவளை காட்டாவிநாயகப் பெருமானின் முன்றலுக்கு அணியணியாக வந்து சேர்ந்தன.

முதலில் துவிச்சக்கரவண்டிகளில் துடிப்புள்ள வாலிபர்கள் கடல் மடை திறந்தாற்போல மூவர்ணக் கொடிகள் காற்றில் அசைந்தாட வந்து சேர்ந்தனர், கொக்கிளாய் கொக்குத் தொடுவாய், கரை நாட்டுக்கேணி, செம்மலை, அளம்பில், குடுளமுனை ஆதியாம் கிராமங்களிலிருந்து வேட்பாளர் திரு செல்லத்தம்புவின் தலைமையில் வந்த ஊர்வல வீரர்களை முள்ளியவளை மக்களும் இளைஞர் சேனைகளும் முள்ளியவளைக் கிராமச்சபைத் தலைவர் திரு. எம். அரியகுட்டியவர்களின் தலைமையில், எதிர்கொண்டு வரவேற்றனர்.

சிரித்த முகத்தோடும் நேர்கொண்ட பார்வையோடும் திரு. செல்லத்தம்பு அவர்கள் தலைமை தாங்கி வந்த ஊர்வலத்தை எதிர்கொண்டழைக்கும் போது ஆலய முன்றலில் கூடிநின்ற மக்களனைவரும் செல்லத்தம்பு வெல்ல வேண்டும், தமிழரசு வாழவேண்டும் என்றகோஷம் எழுப்பினர். அதிர்வெடி அதிர, மாலையிட்டு வரவேற்கப்பட்டார் திரு. செல்லத்தம்பு அவர்கள்.

வவுனியாப்பகுதியிலிருந்து வந்த ஊர்வலம் நெடுங்கேணிப் பகுதி ஊர்வலத்தோடு ஒன்றிணைந்து பீற்றர் பொன்கலனின் தலைமையிலும், வ. வா. கி. தலைவர் திரு. ஞானசேகரம் தலைமையிலும் பி. ப. 2.00 மணிக்கு ஆலய முன்றலில் வந்து சேர்ந்தபோது திருவாளர் செல்லத்தம்பு எதிர்கொண்டழைத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அடுத்து இரண்டு 2 30 மணிக்கு மாங்குளம் ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டுப்பகுதிகளில் இருந்தும் வாலிபர் சேனைகள் முள்ளியவளை மைதானத்தை வந்தடைந்தன.

இதற்கிடையில் கார்களிலும், லொறிகளிலும், உழவு இயந்திரங்களிலும் அணியணியாக மக்கள் கூட்டம் ஊர்ந்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி மட்டுமல்ல, வன்னித் தொகுதி இற்றைவரை கண்டிராத மாபெரும் காட்சியாக இருந்தது.

வந்து சேர்ந்த வாலிபர் குழாத்திற்கும் ஏனைய வளமார் வீரர்களுக்கும் களிப்புடன் மதியபோசனம் முள்ளியவளைவாழ் மக்களினால் மன முவந்து அளிக்கப்பட்டது.

உண்டுகளித்துச் சற்று இளைப்பாறியிருக்கும் போது வற்றாப்பளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு இளைஞர் சேனைகள் முறையே முல்லைத்தீவு பட்டினசபைத் தலைவர், தி. வஸ்தியாம்பிள்ளை, (தண்ணீரூற்று) திரு. மாணிக்கவாசகம், வற்றாப்பளை திரு. பொன்னையா ஆகியோரின் தலைமையிலிருந்து வந்து சேர்ந்தனர்.

பல்லாயிரக் கணக்கான வீரர்கள் பல பகுதிகளிலும் இருந்து வந்து முள்ளியவளை மைதானத்தையடைந்த பின்பு, பி. ப. 3 00 மணிக்கு முள்ளியவளை மைதானத்தை வீட்டு கூட்டம் நடைபெறும் முல்லைத்தீவுப் பட்டணம் நோக்கி புறப்பட்டனர். புறப்படும்போது வேட்பாளர் திரு. செல்லத்தம்பு, திரு. வின்சன்ற், கொடை வள்ளலும் எடுத்த கருமத்தை, தொடர்ந்து இடுக்கண் விளைந்தாலும், அஞ்சாது, துவளாது, சோம்பாது செய்து முடிக்கும் ஆற்றல் மிக்க வஸ்தியாம் பிள்ளையவர்களுக்கு முள்ளியவளை கி. ச. அங்கத்தினர் திரு. வே. நாகலிங்கம் மலர் மாலைகள் அணிந்து வழியனுப்பி வைத்தார்.

சுதந்திர தாகம் மிக்க சுந்தர இளைஞர்கள்! இம்முறை வெல்வோம், ஆற்றலின் செம்மல் செல்லத்தம்புவே எம் தலைவன்!! மே 27ல் வெற்றிவாகை சூடுவோம்! அன்று வரை உறங்கோம்! ஊக்கமுடன் செயற்படுவோம் என விநாயகப் பெருமான் சந்நிதிமுன் நின்று வீரச்சபதம் செய்தபோது இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என வீராங்கனைகள் வாழ்த்த 70ம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு எம்முரிமை காக்கும் கட்சிக்கு வன்னி மக்களும், நம் தலைவனை அனுப்பி விட்டார்கள் என்று, எம் தலைவன் செல்வா அவர்கள் இதே ஆலய முன்றலில் வைத்து முள்ளியவளை முல்லைத் திவுப்பகுதி மக்களுக்கு நன்றி கூறும் காட்சியைக் காணத்தான் போகின்றோம் என பெரியோர்கள் எல்லோரும் வாயார வாழ்த்தியனுப்பிய காட்சியைக் கண்டு களிப்புவகை கொண்டனர் மக்கள்.

வீடு கட்டி அலங்கரித்த தேர் வாகனத்தில் வேட்பாளர் வீற்றிருந்தபோது வெற்றிப்புன்னகை அவரின் திருமுகத்தில் களிநடம் புரிந்தது. முன்னுக்கு துவிச்சக்கரவண்டிகளில் இளைஞர் குழாத்தினர் செல்ல, அடுத்து உழவு இயந்திர படையினர் பல நூறாக ஆடி அசைய, அடுத்து மோட்டார் வாகனங்கள் மெல்ல ஊர, இவைகளைத் தொடர்ந்து பெரும் லொறிகள் நகர, நகர் காவலர் வீதிப் பாதுகாப்பைக் கவனித்து வர, ஒலிபெருக்கிகள் ஊர்வலத்தின் அலங்காரத்தை வர்ணித்துச் சொல்ல, வீதிகள்தோறும் மக்கள் வாழ்த்தியனுப்ப ஊர்வலம் முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்டது.

முல்லைத்தீவைச் சென்றடைந்த ஊர்வல வீரர்களை அங்குள்ள பிரமுகர்கள் எல்லோரும் எதிர்கொண்டழைத்து முல்லைத்தீவுப் பட்டினத்தைச் சுற்றி வந்து கூட்ட மைதானத்தையடைந்தனர்.

கூட்டம் பி ப. 6 மணிக்கு பட்டினச் சபைத் தலைவர் திரு ட ஸ்தியாம்பிள்ளையவர்களின் தலைமையில் முற்றவெளி மைதானத்தில் திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் பல பேச்சாளர்கள் பேசினார்கள். இருந்தும் திரு. இராசதுரை, ஆலாலு, போன்றவர்கள் எதிர்பாராது சமூகமளிக்க முடியாமற்போனது மக்களுக்கு ஒரு குறையாக இருந்தது.

தளபதி அமிர் பேசியதோடு கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

அடுத்துத் திரு. செல்லத்தம்பு அவர்கள் பேசியபோது இங்குள்ள காங்கிரஸ் கருங்காலிகள் செய்யும் பொய்ப்பிரசாரங்களுக்கும், ஏனைய கட்டுக்கதைகளுக்கும் நல்ல சாட்டை கொடுத்தார்.

---

### கூ...னி தமிழுக்காக.......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது தமிழரசுப் பிரதிநிதியாகவிருந்த பண்டிதர். கா. பொ. இரத்தினம் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். இது எமது தமிழரசுக் கட்சி சாதித்த சாதனைகளில் ஒன்றென்பதை காங்கிரஸ்காரர் ஏற்றுக் கொள்வார்களா? இது ஒரு சின்ன விஷயமல்ல... காங்கிரசால் இதையாவது செய்ய முடிந்ததா? இவர்களா தமிழினத்திற்கு உரிமைகளை பெற்றுத்தரக்கூடியவர்கள்... எனவேதான், எதிர்காலச் சந்ததி இந் நாட்டிலே தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ இலங்கைத் தமிழரசுக்கட்சியை ஆதரியுங்கள். இலட்சியவாதிகள், தியாக புருஷர்கள், நிறைந்த தமிழரசுக் குடும்பமே இந் நாட்டுத் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்கக் கூடிய குடும்பமென்பதையுணர்ந்து அவர்களையே ஏகப் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் அனுப்பிவையுங்கள்.

(16-4-70 ல், உடுவில் அபேட்சகர் திரு. வி. தர்மலிங்கம் அவர்களை ஆதரித்து இணுவில் சந்தைமைதானத்தில நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. க. ஜெயக்கொடி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து அனுப்பியது —'வண்ணை நிருபர் சண்'

---

## கேட்கிறேன் ஒரு கேள்வி

சிங்கள வெறி தலைவிரித்தாடும் கொடுமை தெரிந்தும் உங்களை மறந்து சிங்கள வெறியரோடு இரண்டறக் கலக்கத் துடிதுடித் தோடுகிறீர்களே—செங்கல் மதகுகளும் பள்ளிகளும் பாதைகளும் தந்து உங்களை மயக்கும் பகைவரோடு சங்கமமாகப் பறந்தடித்தோடுகிறீர்களே துரோகிகளே! நச்சுத் திராவகத்தின் துளிகளே! மான உணர்ச்சி என்பதே இல்லாத மனிதர்களாய் ஏன் ஆனீர்கள்? ஈழத் தமிழர்ளாய் ஏன் பிறவி எடுக்கிறீர்கள்?

அறிஞர் அண்ணா—எங்கள் அரும் பெரும் தலைவன்—வெறிகொள் தமிழினத்தின் வேங்கை வழிகாட்டி—அவனின் அழகுச் சிலையைத் திரைப் படத்தில் காட்டக் கூடாது என்று தடைவிதித்த பஞ்சமா பாதகர்களின் கால்களைக் கொஞ்சி மகிழவா போகிறீர்கள்?

கன்னித் தமிழோடு பின்னி விளையாடும் கலை தெரிந்த வண்ணக் கலைஞன்—தன்னை வளர்த்த தமிழுக்கு தன் இனிய செந்நீர் வியர்வை இவை பரிசாய் இந்நாள் வரை கொடுத்து இயங்கி வரும் தென்னைத் தமிழன்—தமிழகத்தின் இந்நாள் தலைவன் கருணாநிதி ஈழநாடு வருவதென்றால் பத்திரிகைகளைத் தூண்டிவிட்டு கருணாநிதி வரவுக்கு எதிரான கர்ச்சனைகளைக் கிளப்பும் பச்சை வகுப்புவாதக் கும்பலுக்குப் பாதம் தாங்கவா போகிறீர்கள்?

ஈழநாட்டின் தெருவெல்லாம் சந்தியெல்லாம் அரை நிர்வாண அட்டைகளோடும் முழு நிர்வாணக் கதைகளோடும் ஆயிரம் ஏடுகள் விற்பனையாக—தமிழ்ப் புத்தகக் கடைகளுக்கு மட்டும் துப்பறியும் போலீசாரை அனுப்பி அண்ணாவின் நூல்களை இறக்குமதி செய்வோர் யாரென்று ஆராயச்சி நடத்தும் வெறிச் சிங்கள வேட்டைக்காரருக்க தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கவா போகிறீர்கள்?

ஆளும் கட்சியோடு இரண்டறக் கலந்து அழகு தமிழினத்தை அடகு வைக்க—அன்னைத் தமிழ் நாட்டுக்கும் ஈழத் தமிழகத்துக்கும் இடையிலுள்ள இரத்த உறவுக்கு அழிவு தேட ஓடுகிறீர்களே...

அசல் துரோகிகளே! உங்கள் துரோகத்துக்கு ஓர் அளவே கிடையாதா?

பூில் தமிழ் ஆளர்
இராசதுரை.

---

### குணரத்தினத்துக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி இலாகாவுக்கும் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது. அரசியல் பேசக் கூடாதென கல்வி இலாகா சுற்று நிருபங்கள் அனுப்பியபோதும் இவர்கள் மூவரும் பகிரங்கமாகவே தேர்தல் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை எப்படியும் தமிழ் காங்கிரஸ் அபேட்சகராகிய திரு. தா. குணரத்தினத்தை பாராளுமன்றத்திற்கு அனுப்புவோமென்று வீடுவீடாக இரந்து திரியும் இவர்கள் மே 27-ந் திகதி இரவுடன் தொண்டைத் தண்ணீர் வற்ற வீடுகளில் முடங்கிவிடுவர். இவர்கள் பதவிகளும் பறிபோகும் ஆபத்தில் இருக்கின்றது என மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

---

### முஸ்லீமகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டமாவடி, மீருவோடை, வாழைச்சேனைபகுதி முஸ்லீம் மக்கள் இம்முறை தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. மாணிக்கவாசகர் அவர்களையே பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று முழுமூச்சாக உழைத்து வருகின்றனர்.

திரு. மாணிக்கவாசகரது கட்டுப்பணத்தையும் இவர்களே சேர்த்து வழங்க இருக்கிறார்கள்.

---

### பட்டிருப்பு தொகுதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிராம மக்கள் அனைவரும் சமூகம் கொடுத்திருந்தனர்.

அவ்வேளையில் கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்த சுமார் ஆயிரம் இளைஞர்கள் தலைவர் முன்வந்து "இம்முறையும், நாங்கள் நாடாளுமன்றத்திற்கு மக்கள் தொண்டனும், பட்டிருப்பு தமிழ் அரசுக்கோட்டையின் தலைவனுமான இராசமாணிக்கம் அவர்களையே பாராளுமன்றத்துக்கு அனுப்புவோம். பட்டிருப்பில் எட்டப்பர் கூட்டத்துக்கு இனி இடமளிக்க மாட்டோம்' இது உறுதி என்று சத்தமிட்டனர்.

இதை பார்த்திருந்த சபையோர் அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்து தங்கள் உற்சாகத்தைக் காட்டினர்'

---

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் ஏப்பிரல் மாதம் 22-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்,